**நாள் 14.07.2023.**

**OS 142/2021 வா.சா1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி**

நிருபணவாக்குமூலத்தில் கண்ட பட்டியல் படி **வாசாஆ 1 முதல் 9** குறியீடு செய்யவேண்டும்

**2ம் பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான்தான் வாதி. பாகத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி கிரிஜா என்னுடைய இளைய மகள். 2ம் பிரதிவாதி என்னுடைய ஒரே மகன். என் முதல் மகள்சித்ராவின் கணவர் 3ம் பிரதிவாதி. அவரது மகள் 4ம் பிரதிவாதி. என் மூத்த மகள் இறந்துவிட்டாள். எனது கணவர் பெயர் அனந்தராஜன். அவர் வருவாய்துறையில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்தார். 19.12.2019ம் தேதி என் கணவர் இறந்தார். அவர் அப்போது ஓய்வு பெற்று இருந்தார். குடும்பஓய்வூதியம் தற்போது நான்தான் வாங்குகின்றேன். குடும்பஓய்வூதியம் மாதம் ரூ.16,886/- வீடு மற்றும் நிலத்தில் பாகம் கேட்கின்றேன். வீடு தஞ்சாவூர் மாநகராட்சிக்குள் இருக்கிறது. நிலம் ராமபுரம் கிராமத்தில் இருக்கிறது. நிலத்தில் விஸ்தீரணம் 3 ஏக்கருக்கு குறைவு. மொத்தம் 15 மா நிலம் இருந்தது. அதில் 7 மா நிலம் விற்ற பிறகு மீதி இருக்கிறது. என் மாமனாரின் மாமனார் பெயர் ராஜாமுதலியார். ராஜாமுதலியார் தன் மகள் ஜெயலட்சுமிக்கு நிலங்களை எழுதிவைத்தார். 1944ம் ஆண்டு ராஜாமுதலியார் எழுதிவைத்த பதிவான உயில்படிதான் ஜெயலட்சுமிக்கு நிலங்கள் கொடுத்தார் என்றால் சரிதான். ஜெயலட்சுமிக்கு என் கணவர் அனந்தராஜனும், பத்மராஜன் என இரண்டு மகன்கள். அந்த உயிலில் தொடர்ந்து ஆண்வாரிசுதான் அடையவேண்டும் என எழுதியுள்ளார் என்றால் சரிதான். அதனால் விவசாய நிலங்களை நான் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. அதன்பிறகு என் மாமனார் உயில் எழுதியிருக்கிறார் அதை நான் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த உயிலில் வீடு பற்றி மட்டும்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல நிலங்களும் சொல்லப்பட்டுள்ளது. என் மூத்த மகளுக்கு 1995ல் திருமணம் ஆனது. அவருக்கு 30 பவுன் நகை போட்டு சீர்வரிசை செய்து திருமணம் செய்தோம். எனது சிறிய மகளுக்கு 2000 ம் ஆண்டில் திருமணம் ஆனது. அவருக்கு 35 பவுன் நகை போட்டு சீர்வரிசை செய்து திருமணம் செய்தோம். எனது இளையமகளுக்கு வேலூரில் என் கணவர் வீட்டுமனை வாங்கி கொடுத்தார். அதற்கு என் மகன் ரூ.2,00,000/- என் கணவரிடம் கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. வீட்டிற்கு முன்னால் உள்ள 6 கடைகளில் இருந்து தலா ரூ.2500/- வீதம் மொத்த

வாடகை ரூ.15,000/- கிடைக்கிறது. அந்த கடைகளை கட்டுவதற்கு நிக்கல்சன் வங்கியில் என் கணவரும் மகனும் கடன் வாங்கினார்கள் என்றால் என்னுடைய நகைகளை அடகுவைத்து கடன் வாங்கினார்கள். எங்கள் குடும்பத்திற்கு கடன்கள் இருக்கின்றன. அந்த கடன்களை வழக்கில் சொல்லவில்லை. கருந்தட்டான்குடியில் ஒரு மனநலமருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் அந்த மருத்துவர் என் மருமகனுக்கு தெரிந்தவர் அதனால் நான் என் உடல் நிலை சரியில்லாததற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன் மனநிலை சரியில்லாததற்கு சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. அந்த மருத்துவரிடம் என்னுடைய மகன்தான் அழைத்துசெல்வார் என்றால் சரியல்ல என் கணவர்தான் அழைத்துசெல்வார். வழக்கு சொத்தில் இருந்த வருமானத்தில் இருந்துதான் மகள்களுக்கு திருமணம் செய்துவைத்தேன் என்றால் சரிதான். என் மகன் சென்னையில் வேலை செய்கிறார். என்னவேலை செய்கிறார் எவ்வளவு வருமானம் என்று சொல்லவில்லை. நான் என் மகன், மருமகள் குடும்பத்துடன் இதுவரை தஞ்சாவூர் உள்ள வீட்டில்தான் வசிக்கிறோம் என்றால் சரியல்ல. நான் என்மகள்கள் வீட்டில் மாறிமாறி இருக்கிறேன். குடும்பவருமானத்தில் இருந்துதான் என் மகள்களுக்கு ஏராளமாக செய்துவிட்டோம் என்றும் அதனால் என் மகள்களுக்கு பாகம் இல்லை என்று சொன்னால் என் கணவர் சொத்து எனக்கு வேண்டும். யாரோ என்னை தூண்டிவிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்ய வைத்தார்கள் என்றால் என் மகன்தான் நீ வழக்கு போடு நான் கோர்ட்டில் பார்த்துக்கிறேன் என்று சொன்னார் அவ்வாறு என் மகன் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தேவையில்லாமல் வழக்கை தாக்கல் செய்தேன் என்றும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.